

# புனித பிரான்சிஸ் அசிசியாரிடம் செபம்

எளிய வாழ்வாலும் தாழ்ச்சி நிறைப் பண்பாலும் கிறிஸ்துவைப் போல் வாழ்ந்த புனித பிரான்சிஸ் அசிசியாரே! ஐந்து காய வரம் பெற்ற அண்ணலே! குறையாத மகிழ்ச்சி, குன்றாத மன சுதந்திரம், மெய்யான மன நிறைவு என்ற பண்புகளுக்கு இலக்கணமாகத் திகழ்ந்தீரே! கிறிஸ்துவின் மீது உயிருக்குயிரான அன்பும், ஆழமான உறவும் கொண்டு விளங்கினீரே!

உம் வீட்டையும் உரிமைச் சொத்தையும் துறந்து ஏழ்மையை அணிந்து கொண்டீரே! வறுமையை உம் கோமகளாகத் தேர்ந்து கொண்டீரே! நற்செய்தி வாழ்க்கை முறையும், இயேசுவின் சாயலும் உம்மிடம் துலங்கி ஒளி வீசியதைப் போல, வேறு எவரிடமும் எக்காலத்திலும் விளங்கியது இல்லை என்ற உம் தனிப்பெருமையை எண்ணி வியக்கிறோம். மாமன்னருக்குக் கட்டியம் கூறுபவர் என்றும், மறு கிறிஸ்து என்றும் உம்மை மகிழ்ச்சியுடன் போற்றுகிறோம். இறைவனே உம்மைத் தம்மவராக்கிக் கொண்டதால், நீர் இறைவனின் திருமுன் வலிமைமிக்க புனிதராய்த் துலங்குகின்றீர்.

பக்திசுவாலகத் தந்தையே! உம்மைப் போல, கிறிஸ்துவின் மறைபொருளை எங்கள் வாழ்வின் மையமாகக் கொண்டு வாழ்ந்திட கற்றுத் தாரும். உம்மிடம் விளங்கிய இறையன்பு, நற்செய்தியைப் போதிக்கும் ஆர்வம், இயற்கையோடு இணைந்த வாழ்வு, எம்மிடமும் வளரச் செய்தருளும். இதனால் நிறை மகிழ்ச்சியோடு நாங்களும் அனைவரின் மீட்புக்காக உழைக்க எங்களுக்காக மன்றாடும். ஆமென்!



# புனித பிரான்சிஸ் அசிசியாரின் செபம்

இறைவா, உமது சமாதானத்தின்
கருவியாக என்னை ஆக்கியருளும்.
எங்கு பகை உள்ளதோ அங்கு
அன்பையும்; எங்கு மனவருத்தம்
உள்ளதோ, அங்கு மன்னிப்பையும்;
எங்கு சந்தேகம் உள்ளதோ,
அங்கு நம்பிக்கையையும்;
எங்கு இருள் உள்ளதோ அங்கு
ஒளியையும்; எங்கு துன்பம் உள்ளதோ,
அங்கு இன்பத்தையும்
நான் பரப்ப அருள்தாரும்.

நான் என் ஆறுதலுக்காக அலைவதை
விட்டு, ஆறுதலைக் கொடுக்கவும்,
என்னை மற்றோர்
புரிந்துகொள்ளவேண்டும் என்று
நடப்பதை விட்டு, மற்றவர்களைப்
புரிந்துகொள்ளவும், என்னை
மற்றவர்கள் நேசிக்க வேண்டும் என்று
தவிப்பதை விட்டு, மற்றவர்களை
நேசிக்கவும் முற்படுவேனாக.

ஏனெனில் கொடுப்பதன் மூலம் தான்
பெற்றுக்கொள்ளமுடியும். மன்னிப்பதன்
மூலம் தான் மன்னிப்படைய முடியும்.
இறப்பதின் மூலம் தான்
முடிவில்லாத வாழ்விற்குப்
பிறக்க முடியும் ஆமென்.

www.dailysaints.org